<u>**DEPOSITION OF WITNESS**</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) SC. 218/2023
Sessions)

( Prosecution P.W.7
Deposition of witness for (Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | மூவேந்தன் | -- | |
| Father's Name | **முருகவேல்** | Calling | சார்பு ஆய்வாளர் |
| Village | இராஜபாளையம் | Religion | |
| Taluk | இராஜபாளையம் | Age | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 13th day of October 2025.

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது திருவில்லிபுத்தூர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு இராஜபாளையம் வடக்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது 24.09.2022ம் தேதி மாலை சுமார் 6.30 மணிக்கு இராஜபாளையம் to தென்காசி மெயின் ரோட்டில் NDR சூப்பர் மார்க்கெட் அருகே வனவேங்கை கட்சியைச் சேர்ந்த சிலர் நரிக்குறவர் குருவிக்கார இனம் வேறு, குறவர் இனம் வேறு என்றும் நரிக்குறவர், குருவிக்கார இனத்திற்கு பழங்குடியினர் பட்டியல் இனத்தில் சேர்ப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளிப்பதை கோர தங்களுடைய குறவர் இனத்தையும், பழங்குடி பட்டியல் இனத்தில் சேர்க்கும் படி கோரி ஆர்ப்பாட்டம் செய்து மறியல் செய்தனர், இதனால் அவ்விடத்தில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது, அங்கு பணியில் இருந்த நானும், சிறப்பு சார்பு ஆய்வாளர் மோகன்ராஜ், தலைமைக்காவலர் மாரிபூபதி, தங்கேஸ்வரன், தெற்கு நிலைய காவல் நிலையத்தை சேர்ந்த மணிராஜ், முதல்நிலைக் காவலர் செல்லப்பாண்டி மற்றும் ஆயுதப்படை காவலர் ஆனந்தராஜ் ஆகியோர்கள் அவர்களை கலைந்து போகச் சொன்னோம், அவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றார்கள். கலைந்து சென்ற மேற்படி நபர்களை பற்றி விசாரிக்க சஞ்சய், காளிராஜ், கடற்கரை, ராம்குமார், முத்துப்பாண்டி, சண்முகவேல், இராஜா, பூமிராஜா, ஞானசேகர், முருகன், சஞ்சீவி ராஜ், முத்துப்பாண்டி, ஈஸ்வரன், பேச்சிமுத்து அவர்களுடன் மற்றும் சிலர் என தெரியவந்தது. பின்னர் மாலை 7.00மணிக்கு மீண்டும் மேற்படி நபர்கள் சட்டவிரோதமாக இராஜபாளையம், பாம்பே லாட்ஜ் அருகே கையில் கற்களுடன் ஒன்று கூடினார்கள். அப்போது காளிராஜ், பாலமுருகன் மகன் முத்துப்பாண்டி, முருகன் ஆகியோர்கள் மணிராஜ் மற்றும் செல்லப்பாண்டி ஆகியோர்களை பார்த்து ஏன்டா போலிஸ்கார தேவிடியா மகன்களா,

கூதிமகன்களா என்று அசிங்கமாக பேசினார்கள், அப்போது அங்கு பணியில் இருந்த நானும், சிறப்பு சார்பு ஆய்வாளர் மோகன்ராஜ், தலைமைக் காவலர் மாரிபூபதி, முதல்நிலைக் காவலர் தங்கேஸ்வரன், தலைமைக் காவலர் மணிராஜ், முதல் நிலைக் காவலர் செல்லப்பாண்டி ஆகியோர்கள் ஏன் இப்படி தேவையில்லாமல் பிரச்சனை செய்கிறீர்கள் என்று கலைந்து போகச் சொன்னோம், அப்போது சஞ்சீவி ராஜ், முத்துப்பாண்டி, பேச்சிமுத்து, ஈஸ்வரன் ஆகியோர் மணிராஜ் மற்றும் செல்லப்பாண்டி ஆகியோர்களை கல்லை விட்டு எங்களை நோக்கி கற்களால் மாறி, மாறி எறிந்தார்கள். அதில் நானும், சக காவலர்களும் விலகிக்கொண்டோம். நாங்கள் விலகாமல் இருந்திருந்தால் அந்த கற்கள் எங்கள் மீது பட்டு பெருத்த காயம் ஏற்பட்டு இறந்திருப்போம். அவர்கள் எறிந்த கற்கள் மணிராஜ் மற்றும் செல்லப்பாண்டி ஆகியோர்கள் மீது பட்டு அவர்களுக்கு காயம் ஏற்பட்டது, இதனால் நானும், சக காவலர்களும் அவர்கள் மீது சிறு பலபிரயோகம் செய்து அவர்களை கலைந்து போகச் சொன்னோம். அப்போது காளிராஜ் மற்றும் சண்முகவேல் மேற்படி நபர்களை அழைத்துச் சென்றார்கள். மேற்படி நபர்கள் போகும்போது எங்களைப் பார்த்து எங்கள் சாதிக்காரங்க அரசாங்கத்தை எதிர்த்து என்ன கோரிக்கையானாலும் வைப்போம், அதற்கு இடைஞ்சலா போலிஸ்காரனா இருந்தாலும் வெட்டிக் கொலை செய்து விடுவோம் என்று மிரட்டிவிட்டு சென்றார்கள். இந்த சம்பவம் பூர்வீகா மொபைல் கடைக்கு எதிரே இட்லி கடை வைத்திருக்கும் கனகசபாபதி மகன் கிறிஸ்டோபர் மற்றும் ஆனந்தா சைவ உணவகத்திற்கு எதிரே குரு பீடா ஸ்டால் நடத்தி வரும் பெருமாள் மகன் சிவராமன் என்பவர்களுக்குத் தெரியும். பின்னர் காயம் பட்ட தலைமைக் காவலர் மணிராஜ்க்கு இடது பக்க தலையில் வலது பக்க கை முட்டியிலும், இடது பக்க தோள் பட்டைக்கு கீழ் வலிக்காயமும் இருந்தது. முதல்நிலைக் காவலர் செல்லப்பாண்டிக்கு வலது பக்க காது அருகே காயம் ஏற்பட்டிருந்தது. உடனே ஆயுதப்படை காவலர் ஆனந்தராஜ் அந்த வழியாக வந்த ஆட்டோவில் மணிராஜ் மற்றும் செல்லப்பாண்டி ஆகியோர்களை இராஜபாளையம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதாக கூறிவிட்டு சென்றார். இது சம்மந்தமாக தலைமைக் காவலர் மணிராஜ், இராஜபாளையம் வடக்கு காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்த விபரம் தெரிந்து கொண்டேன். நடந்த சம்பவம் குறித்து காவல் ஆய்வாளர்கள் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சம்பவ நடந்த இடம் இராஜபாளையத்தின் மையப்பகுதியாகும். மக்கள் நடமாட்டம் எப்போதும் இருக்கும். சம்பவத்தின் முதல் நாள் சத்திரப்பட்டியிலிருந்து, மலையடிப்பட்டி செல்லும் சாலையில் சுமார் 150 நபர்கள் இதே கோரிக்கைக்காக உண்ணாவிரதம் இருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி உண்ணாவிரதத்திற்கு எங்கள் காவல்நிலையத்திலிருந்து பாதுகாப்பு வழங்கினார்கள். சம்பவத்தன்று காலையில் உண்ணாவிரதம் இருந்த 150 நபர்களை இராஜபாளையம் ஜெகதீசன் மண்டபத்தில் அடைத்து வைத்தார்கள். மேற்படி மண்டபத்திற்கு உள்ளேயே அவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் இருந்தார்கள். உயர் அதிகாரிகளின்

உத்தரவிற்கு இணங்க அவர்களை கலைந்து செல்லும் படி வற்புறுத்தினேன் என்றால் அவர்கள் சாப்பிட்டுவிட்டதால் கலைந்து செல்லும் படி கூறிவிட்டோம். மேற்படி மண்டபம் சிறிய இடம் என்றும், அந்த மண்டபத்திற்குள் நான் தடியடி நடத்தியதால் அ.சா1, அ.சா.2 ற்கு காயம் ஏற்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொன்னது போல சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 , அ.சா.2 ற்கு எந்தவிதமான காயமும் எதிரிகளால் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 13th day of October 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**